இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 21-01-2025

# அருந்ததியர்க்கு ஒளிவிளக்கு

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டு - அன்றைய துணை முதலமைச்சர் - இன்றைய முதலமைச்சர் - மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்ட அருந்ததியினர் உள் ஒதுக்கீடுச் சட்டமானது அருந்ததியினர் இன மக்களுக்கு எத்தகைய ஒளிவிளக்காகத் திகழ்கிறது என்பதை 'தி இந்து' ஆங்கில நாளிதழ் வெளிச்சமிட்டுக் காட்டி இருக்கிறது.

அருந்ததியினர்களுக்கு 3 விழுக்காடு உள் ஒதுக்கீட்டை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வழங்கியது. இதன் மூலமாக கல்வி, வேலை வாய்ப்பில் அருந்ததியினர் இன மக்கள் எந்தளவுக்கு முன்னேறி வருகிறார்கள் என்பதை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி தகவல்களைப் பெற்று 'தி இந்து' நாளிதழ் வெளியிட்டுள்ளது.

* 2018-19 கல்வி ஆண்டில் எம்.பி.பி.எஸ். மருத்துவப் படிப்பில் அருந்ததியினர் இன மாணவர்கள் 107 பேர் சேர்ந்துள்ளார்கள் என்றும் 2023-24 கல்வியாண்டில் 193 மாணவர்கள் சேர்ந்துள்ளார்கள் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

* 2009 ஆம் ஆண்டு அருந்ததியினர் இன மாணவர்களில் 193 பேர் தான் பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்தார்கள் என்றும், ஆனால் இந்த ஆண்டு அந்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 944 ஆக உயர்ந்து விட்டது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

இதன் மூலமாக அருந்ததியினர் இன மக்களின் சமூக மேம்பாடு அதிகரித்துள்ளதாக 'தி இந்து' ஆங்கில நாளேடு கூறி உள்ளது. **"பள்ளத்தில் கிடப்போரைப் படிகளில் ஏற்றி வைத்திருக்கிறோம் என்ற பெருமிதத்தோடு செயல்படுகிறது திராவிட மாடல் அரசு. சமூக நீதிக்கான இலட்சியப் பயணத்தில் இச்சாதனை ஒரு முக்கிய மைல்கல்"** என்று பெருமிதத்துடன் சொல்லி இருக்கிறார் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு மதிவேந்தன். அதைத் தான் உறுதி செய்துள்ளது 'தி இந்து'.

**"தி.மு.க. அரசு எந்தவொரு சட்டத்தை நிறைவேற்றும் போதும், அதற்குரிய காரணங்களை முறையாக ஆராய்ந்து தரவுகளைத் தொகுத்து, ஓய்வுபெற்ற நீதிபதிகளைக் கொண்டு குழு அமைத்து, பரிந்துரைகளைப் பெற்று சாமானிய மக்களுக்கு உரிய பயன்களை உண்மையிலேயே அளித்து வருவதால் தி.மு.க. அரசின் சட்டம் எப்போதும் வெற்றியைப் பெற்று வருவது வரலாறு"** என்றும் பாராட்டி உள்ளது.

தலைவர் கலைஞரின் தொலை நோக்குப் பார்வைக்குக் கிடைத்த பாராட்டு ஆகும் இது.

அருந்ததியினர் இன மக்களின் நிலை குறித்து ஆராய நீதியரசர் ஜனார்த்தனம் தலைமையில் ஆணையம் அமைத்தார் முதலமைச்சர் கலைஞர். அவர் அளித்த பரிந்துரைப்படி தமிழ்நாடு அருந்ததியர் சட்டம் - 2009 என்ற புதிய சட்டத்தை 26.2.2009 அன்று நிறைவேற்றினார் முதலமைச்சர் கலைஞர். முதுகில் அறுவைச் சிகிச்சை செய்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார் முதலமைச்சர் கலைஞர். எனவே, அன்றைய துணை முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த சட்ட முன்வடிவை அவையில் தாக்கல் செய்தார். இதன் காரணமாக அருந்ததியர் சமுதாய மக்கள் கல்வி, வேலை வாய்ப்புகளை அதிகம் பெற்றார்கள். இத்தகைய சட்டத்தை முறையாகக் கொண்டு வந்து நிறைவேற்றினார் தலைவர் கலைஞர் அவர்கள். அதில் தான் இதன் வெற்றி அமைந்துள்ளது.

23.1.2008 அன்று, 'சமூக பொருளாதாரத்தில் அடித்தளத்தில் அருந்ததியினர் இருப்பதால், அவர்களின் முன்னேற்றத்திற்குத் தனியாக உள்ஒதுக்கீடு வழங்கிட அரசு முடிவு செய்துள்ளது' என தி.மு.க. அரசு அறிவித்தது. இது பற்றி ஆலோசனை செய்ய அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தை கூட்டினார் முதல்வர் கலைஞர். இக்கூட்டத்தின் முடிவுப்படி சென்னை உயர்நீதி மன்ற முன்னாள் நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் தலைமையில் ஒரு ஆணையத்தை அமைத்தார் முதல்வர் கலைஞர். 22.11.2008 அன்று நீதியரசர் ஜனார்த்தனம் ஆணையம் அறிக்கையை அளித்தது. 27.11.2008 - ஆணையத்தின் அறிக்கையை தி.மு.க. அமைச்சரவை ஆலோசனை செய்து ஏற்றுக் கொண்டது.

26.2.2009 அன்று அருந்ததியர் மக்களுக்கு 3 விழுக்காடு உள் ஒதுக்கீடு வழங்கும் சட்டமுன்வடிவை அன்றைய துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றத்தில் தாக்கல் செய்தார். அன்றைய தினமே ஏகமனதாக நிறைவேறியது. 12.3.2009 - அறிவிக்கை வெளியானது. 29.4.2009 - அருந்ததியினர் சமுதாயத்திற்கான உள் ஒதுக்கீடு சட்டம் அரசிதழில் வெளியிடப்பட்டது.

அன்றைய தினம் உடல்நலமில்லாமல் இருந்தார் முதல்வர் கலைஞர். அவரால் சட்டமன்றத்துக்கு வர முடியாத சூழல். உரையைத் தயாரித்து அன்றைய துணை முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களிடம் ஒப்படைத்தார் கலைஞர். இதுதான் அருந்ததியினர் இன மக்கள் மீது தி.மு.க. அரசு வைத்த உண்மையான அன்பாகும்.

**தலைவர் கலைஞரின் துல்லியமான செயல்பாடு காரணமாகத்தான், 'பட்டியல் இனத்தவருக்கான இடஒதுக்கீட்டில் அருந்ததியருக்கு உள்ஒதுக்கீடு வழங்க தமிழக அரசுக்கு அதிகாரம் உண்டு' என்று 2024 ஆகஸ்ட் மாதம் உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. இந்த அமர்வு என்பது ஏழு நீதிபதிகளைக் கொண்ட பெரிய அமர்வு. தலைவர் கலைஞரின் சட்ட அறிவுக்கும் சாட்சியாக இந்த சட்டம் அமைந்தது. அருந்தியின மக்களின் நன்மைக்காகச் செயலாற்றும் 45 அமைப்பினர் அண்ணா அறிவாலயம் வந்து முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டுதல்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்தார்கள்.**

7.6.1971 - இல் பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கு அளிக்கப்பட்டிருந்த 16 சதவீத இடஒதுக்கீட்டை 18 சதவீதமாக உயர்த்தினார் முதல்வர் கலைஞர். பின்னர் 1990 ஆம் ஆண்டு அந்த 18 சதவீதத்தையும் முழுமையாகப் பட்டியலின மக்களுக்கே உரித்தானதாக ஆக்கி, தனியாக ஒரு சதவீத இடஒதுக்கீட்டை பழங்குடியின மக்களுக்கு தனியாக அளித்தார். இதன் மூலமாக தமிழகத்தில் மொத்த இடஒதுக்கீடு அளவு 69 சதவிகிதம் ஆனது. பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு தனியாக 20 சதவிகித இட ஒதுக்கீட்டை வழங்கியவரும் முதல்வர் கலைஞரே! அந்த அடிப்படையில் 1970 முதல் இன்று வரையில் அனைத்துத் தரப்பினரின் கல்வி, வேலை உரிமையை வழங்கியவராக நிமிர்ந்து நிற்கிறார் கலைஞர். உயர்ந்து நிற்கிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

**1922 ஆம் ஆண்டு நீதிக்கட்சி ஆட்சி காலத்து வகுப்புவாரி உரிமைச் சட்டம் முதல் இன்றைய சட்டங்கள் வரை சமூகநீதியை நிலைநாட்டி வரும் இயக்கமாக திராவிட இயக்கம் தலைநிமிர்ந்து நிற்கிறது.**




வக்பு திருத்த மசோதா மீதான நாடாளுமன்ற கூட்டுக் குழு ஆலோசனைக் கூட்டம் கொல்கத்தாவில் நேற்று (20.1.2025) நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற மக்களவை கழகக் கொறடா ஆ.இராசா மற்றும் எம்.எம். அப்துல்லா ஆகியோர் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கினர்.

## கொள்ளை, திருட்டு, ஆள் கடத்தல், பெண்களுக்கு எதிரான குற்ற தடுப்புகளில்

# இந்தியாவிலேயே பாதுகாப்பான நகரமாகத் திகழும் சென்னை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சிக்கு கிடைத்த வெற்றி என சமூக ஆர்வலர்கள் பாராட்டு!

**சென்னை, ஜன. 21 -**

**நாட்டில் கொள்ளை, திருட்டு, ஆள் கடத்தல், பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுக்கும் மாநகரங்களின் பட்டியலில் இந்தியாவிலேயே பாதுகாப்பான நகரமாக சென்னை மாநகரம் இருப்பது தேசிய அளவிலான புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.**

**இது தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எடுத்து வரும் சீரிய நடவடிக்கைகளின் விளைவு என சமூக ஆர்வலர்கள் பாராட்டியுள்ளனர்.**

இந்தியாவில் வேலை செய்யும் பெண்களுக்கு பாதுகாப்பான நகரங்கள் குறித்து பணியிட கலாச்சார ஆலோசனை நிறுவனமான 'அவதார் குழுமம்' கடந்த 8ம் தேதி பட்டியல் வெளியிட்டது.

இந்த பட்டியல் கொலை, கொள்ளை, திருட்டு, ஆள் கடத்தல், பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கும் நகரங்கள், பெண்களுக்கு பணி புரியும் இடங்களில் உள்ள பாதுகாப்பு, பெண்களிடம் மக்கள் அணுகும் முறை, தொழில்துறை, கல்வி, சுகாதாரம், வீட்டுவ சதி உள்ளிட்ட குறியீடுகளை வைத்து பாதுகாப்பான நகரங்கள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த பட்டியலில் இந்தியாவில் வேலை செய்யும் பெண்களுக்கு பாதுகாப்பான நகரம் கர்நாடகா மாநிலம் பெங்களூரு என்றும், இரண்டாவது இடம் தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை மாநகரம் என்றும் இடம் பெற்றுள்ளது. சென்னை மாநகரம் பெண்கள் வாழ்க்கை தரம் மற்றும் உள்கட்டமைப்புகளில்பெங்களூருவை விட சிறந்து விளங்குகிறது. நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி துறையில் பணியாற்றும் பெண்களில் சென்னையை சேர்ந்தவர் 43 சதவீதமாக உள்ளனர்.

அதேநேரம் தேசிய அளவில் எடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின்படி நாட்டில் பாதுகாப்பான நகரம் 'சென்னை மாநகரம்' என்ற சர்வதேச நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த நாளிதழ், நாட்டில் உள்ள 120 நகரங்களில் குற்றங்கள், பெண்கள் பாதுகாப்பு, வேலை செய்யும் பெண்களின் எண்ணிக்கை, கொள்ளை, திருட்டு, ஆள் கட்டத்தல் உள்ளிட்ட விவரங்களின்படி 'சென்னை மாநகரம்' தான் நாட்டில் பாதுகாப்பான மாநகரமாக இருப்பதாக தெரிவித்துள்ளது. அதற்கு முக்கிய காரணம் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பெண்கள் முன்னேற்றம் தான் நாட்டின் முன்னேற்றம் என்று பெண்களுக்கு பல்வேறு சிறப்பு திட்டங்களை அறிமுகம் செய்துள்ளார்.

வேலை செய்யும் பெண்களுக்கு உதவி தொகையாக மாதம் ரூ.1000, பெண்கள் தடையின்றி உயர் கல்வி பெறும் வகையில் கல்லூரி படிக்கும் பெண்களுக்கு மாதம் ரூ.1000 ஊக்கத் தொகை, வீட்டில் இருந்து பள்ளி, கல்லூரிக்கு செல்ல இலவச பேருந்து பயணம், அதேபோல் வேலை செய்யும் பெண்கள் பயன்பெறும் வகையில் இலவச பேருந்து திட்டம் என எண்ணற்ற திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வருகிறார். இதன் காரணமாக நாட்டின் தொழில் உற்பத்தியில் 43 சதவீதம் பெண்கள் தமிழகத்தை சேர்ந்தவர்களாக உள்ளனர்.

இதுதவிர பாலியல் குற்றங்களை தடுக்கவும், பெண்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடும் நபர்களுக்கு உச்சபட்ச தண்டனையாக மரண தண்டனை வழங்கும் வகையில் சட்டப்பேரவையில்முதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்கள் போக்சோ உள்ளிட்ட பெண்களுக்கு எதிரான சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்துள்ளார். அனைத்து மாவட்டங்களில் போக்சோ சிறப்பு நீதிமன்றங்கள் நிறுவத் திட்டம், பெண்களுக்கு பணி செய்யும் இடத்தில் பாதுகாப்பு, பெண் உரிமைகள் குறித்து பல்வேறு திட்டங்களை நாட்டிற்கு முன்னோடி மாநிலமாக தமிழ்நாட்டை கொண்டு வந்துள்ளார். இதன் காரணமாக சென்னையில் ஆண்களுக்கு இணையாக பெண்களும் அனைத்துத் துறைகளிலும் பணியாற்றி சிறந்து விளங்குகின்றனர். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநிலம் முழுவதும் சட்ட ஒழுங்கை பாதுகாக்கவும், பெண்களுக்கு முழு பாதுகாப்பு வழங்கும் வகையில் ஒவ்வொரு மாதமும் உள்துறை செயலாளர் தீரஜ் குமார், டி.ஜி.பி. சங்கர் ஜிவால், சென்னை பெருநகர காவல் துறை கமிஷ்னர் அருண், சட்ட ஒழுங்கு கூடுதல் டி.ஜி.பி. டேவிட்சன் ஆசிர்வாதம் ஆகியோர் தலைமையில் ஐ.ஜி.க்கள், டி.ஐ.ஜிக்கள், அனைத்து மாவட்ட எஸ்.பிக்களுடன் ஆலோசனை நடத்தி வருகிறார். இதன் பயனாக தமிழகத்தில் சென்னை உட்பட மாநிலம் முழுவதும் ரவுடிகளின் பழிவாங்கும் கொலை, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் வெகுவாக குறைந்துள்ளன.

குறிப்பாக தமிழகத்தில் முதல் முறையாக சென்னை பெருநகர காவல்துறையில் நுண்ணறிவு பிரிவில் புதிதாக உதவி கமிஷனர் தலைமையில் 'ஒருங்கிணைந்த குற்றப்பிரிவு' தொடங்கப்பட்டுள்ளது. இந்த புதிய பிரிவு தொடங்கிய பிறகு சென்னையில் ஏ மற்றும் ஏ.பி ளஸ் ரவுடிகள் அனைவரும் ஆந்திரா உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கு தப்பி ஓடிவிட்டனர்.

இருந்தாலும், அவர்களை விடாமல் ஒருங்கிணைந்த குற்றப்பிரிவு தனிப்படையினர் ஏ மற்றும் ஏபி ளஸ் ரவுடிகளை வெளிமாநிலங்களுக்கு சென்றுசம்பந்தப்பட்ட மாநில காவல்துறை உதவியுடன் கைது செய்து வருகின்றனர். அதிலும் குறிப்பாக கடந்தாண்டு ஜூலை 8ம் தேதிக்கு பிறகு சரித்திர பதிவேடு குற்றவாளிகள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு அவர்சுள் மீது நிலுவையில் உள்ள வழக்குகள் தொடர்பான குற்றப்பத்திரிகை சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அவர்களின் பிணை ரத்து செய்யப்பட்டும் மற்றும் அவர்கள் மீதுள்ள வழக்குகளில் சட்டப்படி தண்டனை பெற்றுக் கொடுத்ததன் காரணமாக ரவுடி கொலைகள் எதுவும் நடைபெறவில்லை.

அந்த வகையில் சென்னை பெருநகர காவல்துறை எடுத்த நடவடிக்கையால் கடந்த 2022ம் ஆண்டு 469 குற்றவாளிகளும், 2023ம் ஆண்டு 714 குற்றவாளிகளும் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். 2024ம் ஆண்டு 591 ரவுடிகள், 79 திருட்டு வழக்கு குற்றவாளிகள், 300 போதை பொருள் வழக்கு குற்றவாளிகள் உட்பட மொத்தம் 1,302 குற்றவாளிகள் குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனிடையே தேசிய அளவில் வெளியான புள்ளி விவரத்தில் கடந்த 2013ம் ஆண்டு முதல் 2022ம் ஆண்டு கால கட்டத்தில் நாடு முழுவதும் உள்ள மெட்ரோ நகரங்களான டெல்லி, மும்பை, பெங்களூரு, கொல்கத்தா, சென்னை, அகமதாபாத், புனே, ஐதராபாத் ஆகிய நகரங்களில் கடந்த 9 ஆண்டுகளில் பெண்களுக்கு எதிராக பதிவான வழக்கு விவரங்கள், கொள்ளை, திருட்டு, ஆள் கடத்தல் உள்ளிட்ட குற்றங்களில் பதிவான வழக்குகளின் விவரங்களை வைத்து நாட்டின் பாதுகாப்பான நகரமாக சென்னை மாநகரம் திகழ்வதாக புள்ளி விவரங்கள் உறுதி செய்கிறது.

சென்னை பெருநகர காவல் துறையின் அதிரடி நடவடிக்கையால் கொலை, கொலை முயற்சி, திருட்டு, செயின் பறிப்பு உள்ளிட்ட குற்றங்கள் தடுக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக சென்னை மாநகரம் இந்தியாவிலேயே பெண்களுக்கு பாதுகாப்பானதாவும், வேலை செய்யும் பெண்களுக்கு பாதுகாப்பான மாநகரமாக திகழ்வதாக சமூக ஆர்வலர்கள் பாராட்டியுள்ளனர்.



கடலூர் மாவட்டம், திருவந்திபுரம் தேவநாதசுவாமி திருக்கோயில் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதை முன்னிட்டு முன்னேற்பாடு பணிகள் குறித்து வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று (20.01.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சி.பி. ஆதித்யா செந்தில்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார், இந்து சமய அறநிலையத்துறை மண்டல இணை ஆணையர் பரணிதரன், உதவி ஆணையர் சந்திரன், செயல் அலுவலர் வேங்கடகிருஷ்ணன் உட்பட பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.